From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 58 /20

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Pandiselvi | Father/Husband Name | : Rathinasababathi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 04.06.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**எதிரி ஆஜர்.**

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

நான் சடையன்பட்டியில் வசிக்கிறேன். அசா1 பாண்டியம்மாள் என் அம்மா. ஆஜர் எதிரியை தெரியும். 28.08.2019ம் தேதி பெருமாள் சங்கில் உள்ள எங்கள் தாத்தாவின் வயலை ஆஜர் எதிரி அவருடைய வயல் என்று சொல்லி என் அம்மாவிடம் வீட்டில் வந்து சண்டை போட்டார். அப்போது காலை 08.30 மணி இருக்கும். பின்பு என் அம்மா வயலுக்கு போகும்போது ஆஜர் எதிரி வந்து என் அம்மாவை பார்த்து தேவிடியா என்று கெட்டவார்த்தையால் பேசினார். காலால் என் அம்மாவை அடித்தார். என் அம்மா சத்தம்போட்டு நான், என் தம்பி மலைச்சாமி, என் தம்பி மனைவி கார்த்திகா, என் அப்பா சுப்பையா ஆகியோர்கள் போனோம். ஆஜர் எதிரி ஓடிவிட்டார். என் அம்மா மயக்கமாக இருந்தார். என் அம்மாவை மேலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

போலீசார் விசாரிக்கும்போது எதிரி உங்கள் வீட்டில் வந்து உங்கள் அம்மாவிடம் சண்டை போட்டார் என்று சொன்னீர்களா என்றால் ஆம். உங்கள் வீட்டிற்கு எதிரி காலை 08.30 மணிக்கு வந்தார் என போலீசார் விசாரணையில சொன்னீர்களா என்றால் ஆம். உங்களை நத்தம் தாலுகா சடையன்பட்டியல் திருமணம் செய்து கொடுத்துள்ளர்கள் என்றால் ஆம். அந்த ஊருக்கும் உங்கள் பெற்றோர் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 25 கி.மீ இருக்கும். உங்கள் அப்பாவின் அப்பா பெயர் அய்யாவு என்றால் சரிதான். எதிரியின் அப்பா பெயர் அய்யாவு என்றால் சரிதான். உங்கள் அப்பாவுடன் பிறந்த சகோதரிகள் அழகு,

வீரம்மாள், பஞ்சவர்ணம், மாயன்குட்டி என்றால் சரிதான். உங்கள் உடன் பிறந்தவர்கள் பாண்டி செல்வம் தவப்பாண்டி என்றால் சரிதான். உங்கள் தாத்தா பெயரும் எதிரியின் பெயரும் ஒன்றாக இருப்பதால் இறப்பு சான்றிதழ் வாங்கியது சம்மந்தமாக பிரச்சனை இருந்ததா என்றால் ஆம்.

2) எதிரியின் அப்பாவின் பெயர். பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி உங்கள் தகப்பனார் பெற்ற இறப்பு சான்றிதழை வைத்து உங்கள் அத்தைகளிடமிருந்து விடுதலை பத்திரம் வாங்கி அதன்மூலம் உங்கள் தகப்பனார் உங்கள் சகோதரர்கள் பெயரில் தான செண்டில்மென்ட் ஏற்படுத்தி எதிரியின் சொத்துக்களை அபகரித்துகொண்டிர்கள் என்றால் சரியல்ல. எதிரி மேற்படி சொத்தை அபகரித்ததால் பத்திர பதிவு அலுவலகத்திலும், காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் அவர் மீது விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. போலீசார் நடவடிக்கை எடுக்ககாததல் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் கோரினார் என்றால் தெரியாது. நீங்கள் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை எதிரி மீது உள்ள முன்விரோதம் காரணமாக நீங்கள் உங்கள் பெற்றோர்கள் சேர்ந்து எதிரியை பணியை வைக்க வேண்டுமென்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் நத்ததில் இருந்ததால் உங்களுக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.